# பாதுகாப்பான படகோட்டலுக்கான 10 உதவிக்குறிப்புகள்

சராசரியாக, 140 கனடியர்கள் படகோட்டும் சம்பவங்களில் ஒவ்வொரு வருடமும் நீரில் மூழ்கி இறக்கின்றனர். இவற்றில் 80 சதவிகிதத்திற்கும் மேலானோர் ஆண்கள். 90 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் காப்புச்சட்டைகளை அணிவதில்லை. சாலையில் செல்லும்போது, நீங்கள் உங்கள் வார் பட்டைகளை ஒரு விபத்து நேர்கையில் அதை அணிவதற்கான நேரம் இருக்காது என்பதினால் அணிகிறீர்கள். நீரில் இருக்கும்போது, உங்களது காப்புச்சட்டை அதே போல செயல்படுவதாக எண்ணுங்கள். அதை அணியாவிடில் அது செயல்படாது.

**பாதுகாப்பான படகோட்டலுக்கான முக்கியமான உதவிக்குறிப்புகள்:**

1. குளிர்ந்த நீர் நீங்கள் நினைப்பதை விட அபாயகரமானது. குளிர்ந்த நீரினால் ஏற்படும் அதிர்ச்சியைத் தாங்கத் தயாராகுங்கள் - எப்போதும் காப்புச் சட்டையை அணியுங்கள்.
2. மதுவும் படகோட்டலும் ஒன்றுக்கொன்று சேராதவை. கரையிலேயே மதுவை விட்டு விடுங்கள்.
3. வானிலை முன்னறிவிப்பை சரிபாருங்கள். மோசமான வானிலை வருகின்றதெனில் உடனே கரைக்குத் திரும்புங்கள்.
4. நீர் மின் நிலையங்கள் மற்றும் அணைகளைச் சுற்றியுள்ள எல்லா எச்சரிக்கை அறிகுறிகளுக்கும் மிதவைகளுக்கும் கீழ்ப்படியுங்கள்; சில வினாடிகளிலேயே நீர்நிலைகள் அமைதிக் காட்சியிலிருந்து கோரமான விசை அலைகளைக் கொண்டிருப்பதாக மாறலாம். “தெளிவாக இருங்கள், பாதுகாப்பாக இருங்கள்”.
5. மின்படகுகளைப் பொறுப்பாக ஓட்டுங்கள் - உகந்த வேகத்தை, குறிப்பாக நீர் சீரற்று இருக்கும் போது பயன்படுத்துங்கள்.
6. இருக்கையிலேயே இருங்கள்! சிறிய மின்படகு, தோணி அல்லது கயாக் ஆகியவற்றிலிருந்து மிகச் சுலபமாக நீங்கள் கீழே விழக்கூடும்.
7. தயாராக இருங்கள். கப்பல் தளத்தில் தேவையான பாதுகாப்பு கியரையும் போதுமான எரிபொருளையும் உங்களது கலம் கொண்டிருப்பதை உறுதி செய்யுங்கள்.
8. நீங்கள் நீர்நிலையில் இருக்கும்போது மீ மிகு அலைவெண் (விஹெச்எப்) ரேடியோ அல்லது கைப்பேசியைக் கொண்டு செல்லுங்கள்.
9. நீங்கள் எங்கே போகிறீர்கள் என்பதையும் எப்போது திரும்பி வருவீர்கள் என்பதையும் எப்போதுமே யாரிடமாவது சொல்லி வைத்திருங்கள்.
10. பயிற்சி பெறுங்கள். நீரில் எதிர்பாராதவிதமாக விழுந்து விட்டால் எப்படி உயிர் பிழைப்பது என்பதைக் கற்றுக் கொள்ளுங்கள்.

**பாதுகாப்பான படகோட்டலுக்கான உதவிக்குறிப்புகளை அளிப்பவர்கள் லைப் சேவிங் சொஸைட்டி (Lifesaving Society) மற்றும் ஒன்றாரியோ பவர் ஜெனரேஷன் (Ontario Power Generation).**
**மேலும் அதிக விவரங்களுக்கு www.lifesavingsociety.com க்குச் செல்லுங்கள்.**

LIFESAVING SOCIETY®
*The Lifeguarding Experts*

Transport Canada Transports Canada
OFFICE OF BOATING SAFETY
BUREAU DE LA SÉCURITÉ NAUTIQUE

O.P.P.

SmartBoater.ca

ONTARIO POWER GENERATION
www.opg.com

Tamil